IN THE COURT OF JUDICIAL MAGISTRATE ARAKKONAM, RANIPET DISTRICT

PAGE NO.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIIII of Criminal Procedure

| | | |
|---|---|---|
| Calender | : | CC.136/2018 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution : PW-2 |
| Neme | : | அருள் |
| Husband Name | : | கோவிந்தராஜ் |
| Village | : | வேடல் |
| Taluk | : | அரக்கோணம் |
| Caste | : | - |
| Calling | : | விவசாயம் |
| Religion | : | Hindu |
| Age | : | 49 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 18.02.2021.

மு.வி.சத்தியப்பிரமாணம் தாக்கல் செய்யப்பட்டது.

**தேதி மாதம் ஞாபகம் இல்லை சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்பு என் வீட்டில் இருந்து 50, 60 மீட்டர் தொலைவில் அரக்கோணம் டு சோளிங்கர் கிராமத்தில் உள்ள மெயின் ரோட்டில் வேடல் கிராமத்திடம் விபத்து ஏற்பட்டதாக எங்கள் ஊரைச் சேர்ந்த சோமசுந்தரம் என்பவர் கேட்டார். நான் அவரிடம் அந்த இடத்தில் இல்லை என்று கூறினேன். நான் வீட்டிற்கு வந்த பிறகு அரக்கோணத்தில் இருந்து முனுசாமி பைக்கில்**

வந்ததாகவும், பின்பக்கம் வந்த வேன் இடித்துவிட்டதாகவும், கேள்விப்பட்டேன். அவருக்கு விபத்து ஏற்படுத்திய நபர் மற்றும் வாகனம் குறித்த விவரம் எனக்கு தெரியாது. எனது தம்பி பெயர் அரிதாஸ். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

<u>அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டதன் பேரில் அனுமதி அளிக்கப்பட்டது.</u>

16.08.2018 பகல் 2 மணிக்கு நீங்களும் உங்கள் தம்பி அரிதாசும் அரக்கோணம் டு சோளிங்கர் ரோட்டில் சத்தியா என்பவர் வீட்டின் அருகில் பேசிக்கொண்டு இருந்ததாதகவும் அப்போது எதிரே இடது கை ஓரமமாக உங்களுக்கு தெரிந்த முனுசாமி என்பவர் அவரது டி.என்.73டி1021 யமாஉறா வண்டியின் மீது உட்கார்ந்து கொண்டு இருந்ததாகவும், அவருடைய மனைவி மங்கையர்கரசி எதிரில் உள்ள நோட்டில் வேர்க்கடலை வாங்கி கொண்டு இருந்ததாகவும், சோளிங்கர் டு அரக்கோணம் ரோட்டில் அதிவேகமாகவும், அஜாக்கரதையாகவும், போலிரோ பதிவு எண்.டி.என்.20சிபி1417 வேகமாக வந்து முனுசாமி மீது மோதியதாகவும், அதனால் முனுசாமிக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டதாகவும், அந்த வாகனத்தை ஓட்டியவர் பற்றி விசாரிக்கும்போது சோளிங்கர் மோட்டுரை சேர்ந்த விஜயன் என்று தெரிய வந்ததாகவும், முனுசாமி விபத்தில் இறந்து விட்டதாகவும், சம்பவத்தை நேரில் பார்த்துவிட்டு தற்போது எதிரியை வழக்கில் இருந்து காப்பாற்றுவதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

கு.வி.இல்லை.